தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**15 வயதுப்பிரிவு**
(01.01.2006 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

## தாயகத்தின் பொருண்மியம்

எங்கள் தாய்நாடு அழகொளிரும் வளங்கள் நிறைந்த பொன்னாடு. நிலவளமும் நீர்வளமும் கடல்வளமும் காட்டுவளமும் கனிமவளமும் நிறையப் பெற்றதோடு அதனைச் செயலாக்கம் செய்யக்கூடிய மாந்த வளத்தையும் தன்னகத்தே கொண்டது.

சிறிலங்கா அரசு திட்டமிட்டுத் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட நிலப்பறிப்புகள், இனப்படுகொலைகளோடு எமது பொருண்மியத்தையும் சிதைத்தது. பாதைகளை மூடிப் பெரும் பொருளாதாரத் தடையை எம்மக்கள் மீது விதித்தது. தமிழ்மக்களைப் பட்டினிச் சாவால் மட்டுமன்றி எல்லா வகையிலும் நெருக்கடிக்குள் கொண்டுவந்து நசுக்கிவிடலாம் எனக் கனவு கண்டது.

'எமது மண்ணில் எமது கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும்' என்ற எண்ணம் கொண்ட தலைவர் மாமா, பொருண்மிய மேம்பாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கினார்.

விவசாயம், கடற்றொழில், விலங்கு வேளாண்மை, கிராமிய உற்பத்திக்குழு, பனைதென்னை வள அபிவிருத்தி, கைத்தொழில், உணவு பதனிடுதல், வணிகம், உள்ளூர் தொழில்நுட்பங்கள், மரங்கள் வளர்த்தல், சூழல் பாதுகாப்பு, உட்கட்டுமானம் எனப் பல கட்டுமானங்கள் உருவாக்கம் பெற்றன.

அனைத்து வளங்களையும் உச்சமாகவும் திறனாகவும் பயன்படுத்தி, அதை விரைவாக மக்களிடம் கொண்டு சேர்த்து, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வழிசமைத்துக் கொடுத்தார் தலைவர் மாமா. மிகச்சிறப்பாக செயற்பட்ட விவசாயிகளுக்கு "வேளாண் மன்னர்கள்" என்ற விருது வழங்கி ஊக்குவித்தார்.

சிறிலங்காவில் இருந்துவரும் கப்பலை எதிர்நோக்கிக் காத்திருந்த பொருண்மிய நிலையை மாற்றி, சொந்தக் கால்களில் தங்கிநிற்கும் தற்சார்புப் பொருளாதாரம் வலுப்பெற்றது. மிகை உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. தன்னிறைவோடு தலைநிமிர்ந்து நின்றது எம் தாயகம்.

எமது தாயகத்தில் நெல் மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கு உகந்த வளமான நிலப்பரப்பு இருக்கிறது. சிலாவத்துறையில் இருந்து திருக்கோயில் வரையான அகன்ற கடல்வளம் இருக்கிறது. இன்னும் கனியவளங்கள் ஏராளம் இருக்கின்றன. தொழில் வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன. வீட்டுத் தோட்டங்கள் அமைத்து தமக்கான தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வளங்களும் தாராளமாய் இருக்கின்றன.

தமிழினம் எப்பொழுதும் முயற்சி என்ற மூலதனத்தைப் பயன்படுத்தி உயர்ச்சி கண்டதாகவே வரலாறு இருக்கின்றது. அதனை எமது பட்டறிவாகக் கொண்டு எமது தாயகம் பொருண்மியத்தில் தன்னிறைவு கொள்ள நாமும் துணையாவோம்.

நன்றி,
வணக்கம்.